Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 72 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 11.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த மத்திய அரசு திட்டம்

## பிரதமர் மோடிக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்



சென்னை

தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்திட திட்டமிட்டுள்ள மத்திய அரசின் முடிவினை வரவேற்றும்,சாதிவாரியான கணக்கெடுப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டுதல்கள் குறித்து விரிவாக விவாதித்து மேம்படுத்திட மாநில முதல்-மந்திரிகள் மற்றும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழுவையும் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியும், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு இன்று (10-01-2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன், சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தத் திட்டமிட்டுள்ள மத்திய அரசின் முடிவின் மூலமாக, விரிவான, நம்பகமான தரவுகளைப் பெற்று, சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்திடவும், நலத்திட்டங்கள் உரியவர்களுக்கு சென்று சேருவதை உறுதி செய்திடவும் இயலும் என்று தெரிவித்துள்ள முதல்-அமைச்சர், இது தமிழ்நாடு அரசின் நீண்டகால கோரிக்கையுடன் ஒத்துப்போவதால், மத்திய அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன், சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்திட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானங்களை ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி, இந்தக் கோரிக்கையில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளதாக முதல்--அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மேலும் மத்திய அரசின் இந்த முடிவானது, ஆதாரங்களின் அடிப்படையிலான சமூகநீதிக்கான தமிழ்நாட்டின் நிலைப்பாட்டினை உறுதி செய்வதாகவும் உள்ளதாக முதல்-அமைச்சர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும், சாதிவாரிக் கணக்கெடுப்பு என்பது ஆழமாகவேரூன்றிய சமூக இயக்கவியல், பல்வேறு மாநிலங்களில் சாதிய கட்டமைப்புகளிலுள்ள வேறுபாடுகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மிகுந்த கவனத்துடன் கையாளப்படாவிட்டால், எதிர்பாராத சமூகப் பதட்டங்களுக்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தக்கூடிய உணர்வுபூர்வமான விஷயமாக உள்ளதால், இக்கணக்கெடுப்பினை மேற்கொள்வதற்கான கேள்விகள், பிரிவுகள், துணைப்பிரிவுகள் மற்றும் தரவு சேகரிப்பு வழிமுறைகள் துல்லியமாகவும், தெளிவானதாகவும் இருக்கும்பட்சத்தில் மட்டுமே, பொது நம்பிக்கையை உறுதி செய்திட முடியுமென்று குறிப்பிட்டுள்ள முதல்-அமைச்சர், இல்லாவிடில், இந்த அம்சங்களில் ஏதேனும் குறைபாடுகள், சர்ச்சைகள், துல்லியமின்மை அல்லது பிளவுபட்ட கருத்துகளை அதிகரிக்கக்கூடும் எனவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மக்கள்தொகைகணக்கெடுப்பு மத்திய அரசின் பட்டியலில் இருந்தாலும், அதன் முடிவுகள் கல்வி, வேலைவாய்ப்பு, இடஒதுக்கீடு மற்றும் நலத்திட்டங்கள் குறித்த மாநில அளவிலான கொள்கைகளை ஆழமாகப் பாதிக்கும் என்பதால் இப்பணி தொடர்பான வினாப் படிவங்கள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றை முடிவு செய்வதற்கு முன்பாக மத்திய அரசு அனைத்து மாநிலங்களுடன் கலந்தாலோசிப்பது அவசியமானதாகும் என்றும் முதல்-அமைச்சர் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இத்தகைய ஆலோசனை, இந்த முக்கியமான செயல்பாட்டில், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களின் பல்வேறு கண்ணோட்டங்களை இணைக்கவும், குறிப்பிட்ட நுணுக்கங்களைக் கணக்கிடவும், கூட்டாட்சியை வளர்க்கவும் உகந்ததாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். எனவே,

1. சாதிவாரிக் கணக்கெடுப்புக்கான வழிகாட்டுதல்கள் குறித்து விவாதித்து மேம்படுத்திட மாநில முதல்-மந்திரிகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழுவை உருவாக்கவும்;

2. இப்பணி தொடர்பான செயல்முறையின் உணர்திறனைப் பாதுகாக்கவும், சமூக நீதியை மேம்படுத்துவதற்கான தரவுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும், தேவைப்படும் இடங்களில் முன்னோடி சோதனை ( pilot study) உட்பட, கட்டமைப்பை வடிவமைப்பதில் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டுமென்றும் முதல்-அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமரின் தலைமையின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தவும், கூட்டாட்சிக் கொள்கைகளை நிலைநிறுத்தவும் பயன்படுத்தப்படும் என்று தான் நம்புவதாக முதல்--அமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# வேட்பாளர் யாராக இருந்தாலும் வெற்றியை உறுதி செய்ய வேண்டும்

## அ.தி.மு.க. நேர்காணலில் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தல்



தமிழக சட்டப்பேரவை தேர்தலில், அதிமுக வேட்பாளர் யாராக இருந்தாலும், அவர்களின் வெற்றியை அனைவரும் உறுதி செய்ய வேண்டும் என்று நேற்று நடந்த நேர்காணலில் பங்கேற்றவர்களிடம் அக்கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி அறிவுறுத்தினார்.

சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிட விருப்பம் உள்ளவர்களிடம் இருந்து மொத்தம் 10,175 விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. அதில், கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி தங்களின் தொகுதியில் போட்டியிட வேண்டும் என 2,187 பேர் விருப்ப மனு அளித்திருந்தனர். தேர்தல் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுடனான நேர்காணல், சென்னையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. பொதுச்செயலாளர் பழனிசாமி நேர்காணல் செய்தார்.

முதல் நாளான நேற்று காலை சேலம் மாநகர், சேலம் புறநகர், ஈரோடு மாநகர், ஈரோடு புறநகர் கிழக்கு மற்றும் மேற்கு, கரூர், திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு தொகுதிகளில் போட்டியிட விரும்புவோருக்கான நேர்காணல் நடைபெற்றது. பிற்பகலில் நாமக்கல், திருப்பூர் மாநகர், திருப்பூர் புறநகர் கிழக்கு மற்றும் மேற்கு, கோவை மாநகர், கோவை புறநகர் வடக்கு மற்றும் தெற்கு, நீலகிரி ஆகிய தொகுதிகளுக்கான நேர்காணல் நடைபெற்றது.

ஒவ்வொரு தொகுதிக்கும் 45 நிமிடங்கள் ஒதுக்கப்பட்ட நிலையில், அந்தந்த தொகுதிகளுக்கு விருப்ப மனு அளித்த அனைவரையும் ஒன்றாக சந்தித்து பழனிசாமி நேர்காணல் செய்தார். கட்சி வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டது, முன்னின்று நடத்திய போராட்டங்கள், திமுக அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தி, கைதாகி சிறை சென்ற விவரங்கள், தொகுதி மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கு, வெற்றிக்கான வாய்ப்பு ஆகியவை குறித்து நேர்காணலில் பழனிசாமி கேட்டறிந்தார். பின்னர் அவர் பேசியதாவது:


கட்சித் தலைமை அறிவிக்கும் வேட்பாளர் அல்லது கூட்டணி கட்சி வேட்பாளர் என யாராக இருந்தாலும், அவர்களின் வெற்றியை உறுதி செய்ய வேண்டும். அதற்காக அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். பத்தாயிரத்துக்கும் அதிகமான விருப்ப மனுக்கள் பெறப்பட்டிருப்பதன் மூலம் அடுத்த ஆட்சி அதிமுக ஆட்சி தான் என்பது உறுதியாகியுள்ளது.

கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. தங்களின் தொகுதிகள் கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டாலும், அவர்களின் வெற்றிக்காகவும் கடுமையாக உழைக்க வேண்டும். உட்கட்சி பூசல் இல்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி வெற்றியை உறுதி செய்திட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்;

## தமிழ கடலோர மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை




சென்னை:

வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு இலங்கையின் திரிகோணமலை--யாழ்ப்பாணம் இடையே இன்று (ஜனவரி 11) பிற்பகல் கரையை கடக்கும் என சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இலங்கையை நோக்கி 12 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்தது.

தற்போது சென்னைக்கு தெற்கு தென்கிழக்கில், 410 கி.மீ. தொலைவில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளது. 6 மணி நேரமாக 12 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வரும் காற்றழுத்த தாழ்வு இலங்கையின் திரிகோணமலை - யாழ்ப்பாணம் இடையே இன்று (ஜனவரி 10) பிற்பகல் கரையை கடக்கும் தெற்கு கேரள கடலோரபகுதிகள், அதை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில், ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இந்நிலையில், வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் நகரும் வேகம் தற்போது அதிகரித்துள்ளது. அதன்படி 13 கி.மீ. வேகத்தில் இருந்து தற்போது 15 கி.மீ. வேகத்தில் நகர்ந்து சென்னைக்கு கிழக்கு தென்கிழக்கே 940 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தமிழ்நாட்டை நெருங்காது. நாளை (09.01.2026) இரவு இலங்கையில் கரையை கடக்கும்." என்று வானிலை மையம் அறிவித்துள்ளது. தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்கள், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்கள் மற்றும் புதுச்சேரியில் இன்று இடி, மின்னலுடன் மிதமானமழைபெய்ய வாய்ப்புள்ளது. கடலோர மாவட்டங்களில் பலத்த தரைக்காற்று வீசக்கூடும். திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்காலில், இன்று மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதற்கான, 'ஆரஞ்ச் அலெர்ட்' எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில், கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தேனி மாவட்டம் பெரியகுளத்தில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதல்வர் உத்தரவுப்படி பெரியகுளம் நகர திமுக சார்பாக திராவிட பொங்கல் திருவிழா விளையாட்டு போட்டிகள் பெரியகுளம் வி. நி. ஆர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. விளையாட்டு போட்டிகளுக்கான கிரிக்கெட் 10.1.2026 நடைபெற்றது. இந் நிகழ்ச்சியை சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் தூக்கி வைத்தார். கழக செயலாளர் கே. முகமது இலியாஸ் தலைமையில் நகர் மன்ற தலைவர் சுமிதா சிவகுமார் மற்றும் நகர் கழக நிர்வாகிகள் வெங்கடாசலம் சரவணன் சேதுராமன் ராஜபாண்டி செந்தில் குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது கூட்டத்தில் வார்டு கழகச் செயலாளர்கள் பிரதிநிதிகள் நகர் மன்ற உறுப்பினர்கள் மாவட்ட நகர சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக கார்த்திக் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி ஜான் சந்துரு நாகேந்திரன் ஞானமாணிக்கம் முத்தாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.



தாராபுரத்தை சேர்ந்த சமூக சேவகருக்கு சேவை நாயகன் விருது ஜன.9 கோவையில் பிரமாண்ட ஹோட்டலில் சாதனையாளர்களுக்கு (வாகை) விருது வழங்கும் விழா நடைபெற்றது இதில் பிரபல திரைபட நடிகர் வையாபுரி அவர்கள் கலந்து கொண்டு ஒவ் ஒரு துறையிலும் சாதித்தவர்களுக்கு பாராட்டி அவர்களை கௌரிவித்து அவர்களை மென்மேலும் ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது விழாவில் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தைச் சேர்ந்த சமூக சேவகரும் தினதளம் பத்திரிக்கை நிருபருமான ரஜினிகுமார் அவர்களின் 15 ஆண்டு கால சமூக சேவையை பாராட்டி 2026 ஆம் ஆண்டின் சேவை நாயகன் விருது வழங்கப்பட்டது அவர் இதற்கு முன் சமூக சேவகர் சேவை செம்மல் அண்ணல் அம்பேத்கர் போன்ற விருதுகளை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்து கட்டுமான பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக மண்டலம் 9ன் மண்டல மாநாடு மண்டல தலைவர் பொறியாளர் வி. முத்து மற்றும் மண்டல செயலாளர் பொறியாளர் ஆத்மநாதன் ஆகியோர் முன்னிலையில், காரைக்குடியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் காரைக்குடி, தேவகோட்டை, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை, சிங்கம்புணரி, தொண்டி மற்றும் ராமநாதபுரம் உள்ளிட்ட FACEAT&Pயை சேர்ந்த சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொறியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நடைபெற்ற இந்த மண்டல மாநாட்டில் மானாமதுரை வைகை கட்டிட பொறியாளர்கள் சங்கத் தலைவர் ஆனந்த கார்த்திக்தலைமையில் மானாமதுரையை சேர்ந்த சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற்று வரும் திராவிட பொங்கல் விளையாட்டுப் போட்டிகளின் ஒரு நிகழ்வாக புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெற்று வரும் மின்னொளி கபாடி போட்டியினை தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர்கனிமொழி கருணாநிதி எம்.பி போட்டியினை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசு தொகையினை வழங்கினார். இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# காரைக்குடியில் வாஜ்பாய் நூற்றாண்டு விழா மத்திய அரசின் சாதனை விளக்க கூட்டம் நடைபெற்றது

வாஜ்பாய் நூற்றாண்டு விழா, மத்திய பாஜக அரசின் சாதனை விளக்கம் மற்றும் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பாஜக பிரச்சார கூட்டம் காரைக்குடியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய பாஜக சிவகங்கை மாவட்டதலைவர்பாண்டித்துரை, கழனிவாசல் பகுதியில் மினி டைடல் பார்க்அமைக்கஅடிக்கல் நாட்டிய திமுக அரசு நான்குஆண்டுகள் கடந்தும் திட்டத்தை முழுமைப்படுத்த வில்லை என குற்றம்சாட்டினார். அமராவதிபுதூர் சிப்காட் வளாகத்தில் திமுக ஆட்சிக்குப் பிறகு ஒரு தொழிற்சாலை கூட தொடங்கப்படவில்லை என்றும் கூறினார்.

காரைக்குடி பாதாள சாக்கடை திட்டத்தில் பல கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாகவும், வீடுகள் மற்றும் கடைகளுக்கு இணைப்பு வழங்க ரூ.15,000 முதல் ரூ.30,000 வரை லஞ்சம் பெறப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். மேலும், பட்டா வழங்குவதில் திமுக பாகுபாடு காட்டுவதாகவும் குற்றம்சாட்டினார்.

பாஜக ஆட்சிக்கு வந்தால் காரைக்குடி தொகுதிக்கு ஐ.டி நிறுவனங்கள் கொண்டு வரப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

கூட்டத்தில் பாஜக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# நான் முதல்வன் திட்டத்தின் மூலம் படித்த தென்காசி மாணவியின் வீடு கட்டும் பணியை சிவபத்மநாதன் ஆய்வு செய்தார்

கழுநீர்குளம்ராமசாமி முத்துலட்சுமி ஆகியோரின் மகள் பிரேமா என்பவர் அரசு பொறியியல் கல்லூரியில் படித்து அதன் பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அந்த மாணவி பிரேமா அவர்களுக்கு கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் மூலம் வீடு கட்டி தரப்படும் என்று சொன்னார்கள்



அந்த ஊருக்கு சென்றிருந்த பொழுது தலைவர் அவர்களால் நிதி வழங்கப்பட்டு கட்டப்பட்ட அந்த இல்லத்தை ஊராட்சி மன்ற தலைவர் செல்லப்பா கிளைக் கழகச் செயலாளர் முருகன் கண்ணன், கணேசன், மாவட்ட மாணவர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் தினேஷ் பாண்டியன் ,மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் பொன்மேகன்ராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் சென்று பார்த்தோம்.

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பணியிடம் கிடைத்து பணி செய்து வருகிறார்....

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாணவி பிரேமா அவர்கள் உரையாற்றிய போது பேசுகிற பொழுது எங்களுக்கு சொந்தமாக கான்கிரீட் வீடு கிடையாது ஓட்டு வீட்டில் இருந்து தான் படித்தேன் மின்சார வசதி கிடையாது நான் முதல்வர் திட்டத்தின் மூலம் நான் சம்பளம் வாங்கி என் தாய் தந்தையருக்கு ஒழுகாத வீடு கட்டி கொடுக்க வேண்டும் என்று கண்ணீர் மல்க பேசினார்....

அதன் அடிப்படையில் தென்காசியில் நடைபெற்ற விழாவின்போது அதற்கான பணி ஆணையை வழங்கி சிறப்பித்தார்கள் அந்த வீடு கட்டி முடிக்கப்பட்டு விட்டது

பிரேமா அவர்களின் தகப்பனார் கூலி தொழிலாளி எனவே அந்த வீட்டைபூசுவதற்குபணம் தேவைப்படுகிறது என்கிற கோரிக்கையுடன் என்னை அணுகினார் நான் அவரது இல்லத்தை பூசுவதற்கு 50 மூடை சிமெண்ட் வழங்கினேன்

வேறொரு நிகழ்ச்சிக்கு அந்த ஊருக்கு சென்றிருந்த பொழுது... 

நான் முதல்வன் திட்டத்தின் மூலம் வேலையில் சேர்ந்த மாணவி பிரேமா அவர்களுடைய கனவு கழகத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மூலமாக நனவாகிறது என்பதை நினைத்து மகிழ்ந்தோம்

# மானாமதுரை சிப்காட் திட்ட அலுவலக வளாகத்தில் கலெக்டர் பொற்கொடி மற்றும் தமிழரசி எம்.எல்.ஏ. தூய்மை பணியை மேற்கொண்டனர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் தை திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு முன் வரும் போகி பண்டிகையை மாசில்லா போகி பண்டிகையாக கொண்டாடும் விதமாக, மானாமதுரை சிப்காட் திட்ட அலுவலக வளாகத்தில் தூய்மைப்படுத்தும் விதமாகதூய்மைபணியினை மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் இணைந்து துவங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இளையான்குடி மேற்கு ஒன்றியம் திருவள்ளூர் கிராமத்தில் தை திருநாளாம் தமிழர் திருநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பெற்று வழங்கப்பட்டு வரும் ரூபாய் 3000 , பொங்கல் தொகுப்பு, வேஷ்டி, சேலைகள் அடங்கிய தொகுப்பினை பொதுமக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார்.

அதேபோல் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இளையான்குடி தெற்கு ஒன்றியம் சாலிகிராமத்தில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பினை சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார்.

இந்நிகழ்வில் மானாமதுரை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ராஜாமணி,இளையான்குடி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செல்வராஜ், இளையான்குடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வெங்கட்ராமன், கண்ணமங்கலம் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் சுப. தமிழரசன், வட்டார துணை பதிவாளர் ஆஷா, தனி வருவாய் ஆய்வாளர் அமுதா, வட்ட வழங்கல் அலுவலர் மாரீஸ்வரன், விற்பனையாளர் செல்வேந்திரன்,அரசு அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள், கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறையின் சார்பாக 202526 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான சிலம்பப் போட்டி தேனியில் நடைபெற்றது. இதில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சேர்ந்த வீர விதை சிலம்ப அகாடமியை சேர்ந்த மாணவி ஜெயஸ்ரீ சிலம்பப் போட்டியில் பங்கேற்று தங்க பதக்கம் பெற்றுள்ளார். தங்கப்பதக்கம் வென்று சிவகங்கை மாவட்டத்திற்கும் வீர விதை சிலம்ப அகாடமிக்கும் பெருமை சேர்த்துள்ள மாணவி ஜெயஸ்ரீக்கு சிலம்ப மாஸ்டர் பெருமாள் பெற்றோர்கள்மற்றும்உறவினர்கள்தங்கள்வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். மேலும் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக சிலம்பு போட்டியில் ஜெயஸ்ரீ பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோட்டில் சிவகார்த்திகேயனின் 'பராசக்தி' பட வெளியீடு: இனிப்பு வழங்கி ரசிகர்கள் கொண்டாட்டம்





தமிழ் திரையுலகின் முன்னணி நட்சத்திரமான சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' திரைப்படம் வெளியாவதை முன்னிட்டு, ஈரோடு சங்கீதா திரையரங்கில் சிவகார்த்திகேயன் நண்பர்கள் நற்பணி இயக்கம் சார்பில் உற்சாகமான கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இவ்விழாவில் மாவட்டத் தலைவர் பைஜ், மாவட்டச் செயலாளர் விக்னேஷ் மற்றும் மாவட்டப் பொருளாளர் மோகனசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டு ரசிகர்களுக்கும், பொதுமக்களுக்கும் இனிப்புகளை வழங்கி சிறப்பித்தனர்.

மேலும், கௌரவத் தலைவர் கராத்தே மாஸ்டர் ஏ.பிரபாகரன், சூரியம்பாளையம் பகுதி செயலாளர் குணா மற்றும் கோ.கார்த்திகேயன் ஆகியோர் கலந்துகொண்டு நற்பணி இயக்க நிர்வாகிகளுக்குச் சால்வை அணிவித்து கௌரவித்தனர். சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகியுள்ள இப்படம் மிகப்பெரிய வெற்றியடைய வேண்டும் என நிர்வாகிகள் மற்றும் ரசிகர்கள் மேளதாளங்கள் முழங்க முழக்கமிட்டு தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். திரையரங்கு வளாகமே ரசிகர்களின் ஆரவாரத்தால் விழாக்கோலம் பூண்டிருந்தது.



தென்காசி மாவட்டம் வடகரைகீழ்பிடாகை வட்டாரம் பண்பொழி, மசூது ராவுத்தர் அரசு மேல்நிலைப்பள்ளி யில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் (10.01.2026) நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

## கோவை சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெற்ற நிறுவனமான

# குன் நிறுவனம், கோவை மேட்டுப்பாளையம் சாலையில், குன்கியா ஷோரூமில் 'ஆல் நியூ' கியா செல்டோஸ் கார் அறிமுக விழா




கோவையில் மேட்டுப்பாளையம் சாலையில் கியா பிராண்ட் கார்கள் விற்பனைக்கென பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள குன் கியா ஷோரூம், நவீன வசதிகளுடன் கூடிய உள் கட்டமைப்புடன்,வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெற்று தனது முதலாம் ஆண்டு விழாவை அண்மையில் கொண்டாடியது..

இந்நிலையில் குன் கியா ஷோரூமில் புதிய வடிவமைப்பு, மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய 'ஆல் நியூ' கியா செல்டோஸ் கார் அறிமுக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது..

குன் கியா வர்த்தக மேலாளர் ராமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கியா இந்தியா ஏரியா சேல்ஸ் மேனேஜர் பரத்,குன் கியா நிறுவனத்தின் உதவி பொது மேலாளர் உதய் சுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியின் மண்டல மேலாளர் ரங்கநாதன்,பிரபல விஜய் டிவி சூப்பர் சிங்கர் புகழ் விக்னேஷ் பிரபு ஆகியோர் கலந்து கொண்டு புதிய ஆல் நியூ செல்டோஸ் காரை அறிமுகம் செய்து வைத்தனர்..

இதில்,குன் கியா வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்..

அதிகமானவசதிகளை உள்ளடக்கிய பிரீமியம் எஸ்.யூ.வி.யான புதிய கியாசெல்டோஸ்குறித்து குன் கியா வர்த்தக மேலாளர் ராமநாதன் கூறுகையில், மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களுடன், பிரீமியம் வகை காராக அறிமுகம் ஆகி உள்ள ஆல்நியூ கியா செல்டோஸ். சிறப்பான டிரைவிங் அனுபவத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்..

பெட்ரோல் மற்றும் டீசல் ஆகிய இரண்டு வகைகளும் இதில் இருப்பதாகவும், புதிய கியா செல்டோஸ் மேம்பட்ட அடாஸ் தொழில்நுட்பம், பிரீமியம் உட்புற வடிவமைப்பு மற்றும் சிறந்த ஓட்டுநர் அனுபவம் ஆகியவற்றுடன், பனோரமிக் சன்ரூஃப், பெரிய இன்ஃபோடெயின்மெண்ட் சிஸ்டம், 6-ஸ்பீக்கர் ஆடியோ சிஸ்டம், வயர்லெஸ் சார்ஜர் போன்றவை இதில் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்..

மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள குன் கியாஷோரூமில் டெஸ்ட் டிரைவ் மற்றும் முன்பதிவுகள் துவங்கப்பட்டுள்ளதாக கூறிய அவர்,கார் பிரியர்களுக்கு தேவையான அனைத்து அம்சங்களையும் ஆல் நியூ கியா செல்டோஸ் பூர்த்தி செய்யும் என நம்பிக்கை தெரிவித்தார்..




என்னுள் நான் சுயசரிதை புத்தகம் மிகச் சிறப்பாக சென்னை புத்தக கண்காட்சி அரங்கில் வெளியானது. மதிப்பிற்குரிய திரு. சிவகுமார் ஐபிஎஸ் அவர்கள் எழுதிய தன்னுடைய வாழ்க்கை வரலாறு நல்ல வரவேற்பு பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

# தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியில் தமிழ்நாடு மீனவர் நலவாரரியம் உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாம்

## விழாவில் அமைச்சர் கீதாஜீவன், மீனவர் நல வாரியத்தலைவர் ஜோசப் ஸ்டாலின் பங்கேற்பு

திமுக தலைவரும் தமிழக முதலமை ச்சருமான மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்கதமிழ்நாடு மீனவா் நலவாரியம் உறுப்பினா் சோ்க்கை சிறப்பு முகாம் தூத்துக்குடி திரேஸ்புரம் மீன்பிடி இறங்குதளம் மீன்பிடி துறைமுகம் பாத்திமாநகா் ஆகிய 3 இடங்களில் நடைபெற்ற முகாமிற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிா் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் தலைமை வகித்தா். தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தலைவர் ஜோசப் ஸ்டாலின்சிறப்புரையற்றினார். மீன்வளத்துறை இணை இயக்குநா் இளம்வளுதி வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் நலவாரியத்தில் உறுப்பினா் சோ்க்கை முகாமை தொடங்கி வைத்து அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில் 2007ம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் தொடங்கப்பட்ட மீனவா் நலவாரியம் கடந்த அதிமுக ஆட்சியில் 10 ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த நிலையில் 2021ல் மீண்டும் திமுக ஆட்சி அமைந்து தளபதியாா் முதலமைச்சராக பொறுப்பேற்றதும் நல வாரியம் மீண்டும் செயல்பட தொடங்கியது தற்போது இந்த நலவாரியத்தில் உள்ள நன்மைகள் அனைத்தும் மீனவா்களுக்குகிடைக்க வேண்டும் குறிப்பாக இதனை சாா்ந்த வலை பின்னுவோா் ஏலம் விடுவோா் தலைசுமை வியாபாரம் செய்வோா் பதப்படுத்தல் பணியில் ஈடுபடுவோா் என 15க்கும் மேற்பட்டோா் இத்துறைகளில் உறுப்பினராக இணையலாம் இயற்கையை எதிா்கொண்டு தொழில்செய்யும் உங்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் தனியாக நல வாரியம் உருவாக்கப்பட்டு அதன் தலைவராக ஜோசப்ஸ்டாலின் நியமிக்கப்பட்ட பின் தமிழகத்தில் உள்ள 16 கடற்கரை மாவட்டங்களில் விழிப்புணா்வை ஏற்படுத்தி இந்த முகாம் நடைபெறுகிறது. திமுக ஆட்சி அமைந்தபின் மீன்பிடித்தடைகாலத்தில் ரூ 5000 வழங்கியதை ரூ 8 ஆயிரமாக உயா்த்தியுள்ளோம் அது போல் டீசல் மண்ணெண்ணெய் மானியம் வழங்கப்படுகிறது. தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் திரேஸ்புரம் அண்ணா காலனி, விவேகாணந்தன் நகா் உள்ளிட்ட பல வளர்ச்சி பணிகளுக்கு என்று பல கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிந்தும் சில பணிகள் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. கடந்த ஆண்டு மீனவா்களுக்கு என்று தமிழகத்தில் ஒரு மாநாடு நடத்தி அதில் பல்வேறு அறிவிப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து உங்கள் நலனை பேணி பாதுகாத்து வருகிறாா். கடந்த காலத்தில் பெய்த கன மழையின் போது எல்லா ரேசன்காா்டுக்கு ரூ6 ஆயிரம் வழங்கப்பட்டது தற்போது பொங்கலுக்கு ரூ3 ஆயிரம் வழங்கப்படுகிறது தமிழகத்திற்கு ஒன்றியஅரசு வழங்கவேண்டிய கல்விநிதி மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி வழங்க வேண்டிய நிதி ஜிஎஸ்டி நிதி போன்றபல்வேறு வகையான நிதியுதவிகளை தமிழகத்திற்கு வழங்காமல் புறக்கணித்து வருகிறது. அது மட்டுமின்றி வருமான வாித்துறை அமலாக்கதுறைதோ்தல் ஆணையம் என்று இணைந்து மிரட்டியது மட்டுமின்றி தற்போது திரைப்படை தணிக்கைத்துறையும் இணைந்துள்ளது. ஒன்றிய அரசுடன் சேர்ந்து தமிழக மக்களுக்கு தமிழ்நாட்டிற்கும் எதிராக செயல்பட்டு பல்வேறு வகையில் முதலமைச்சரை மிரட்டி பாா்க்கின்றனா். அதற்கெல்லாம் அடிப்பணியாமல் கொள்கையில் தடம் மாறாமல் நெஞ்சுறுதியோடு பல்வேறு நிதிநெருக்கடிக்கு மத்தியிலும் தமிழக மக்கள் நலன் முக்கியம் என்று பணியாற்றியதின் காரணமாக இந்தியாவின் நம் ஒன் முதலமைச்சர் கூறியதை கூட தமிழகம் நம் ஒன் மாநிலமாக திகழ வேண்டும் என்ற கொள்கையோடு உழைத்து வருகிறாா். இந்நிலையில் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது என்று ஒன்றிய அரசின் புள்ளிவிபரம் கூறியுள்ளது. மாநகராட்சி பகுதியில் பல்வேறு கட்டமைப்பு பணிகளை நிறைவேற்றிக் கொடுத்துள்ளோம் தொடர்ந்து உங்களுக்காக பணியாற்றும் திமுக அரசுக்கு உறுதுணையாக இருந்து வரும் காலங்களில் இரண்டாவது முறையாக தளபதியாா் அாியணையில் அமா்வதற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும் என்று பேசினார்.




நிகழ்ச்சியில் மீன்வளத்துறை துணை உதவி இயக்குநா் புஷ்ரா ஷப்னம் நன்றியுரையாற்றினார்.

விழாவில் தமிழ்நாடு மீனவர் நல வாாியத்தலைவர் ஜோசப் ஸ்டாலின், மாநில மீனவரணி துணைச்செயலாளர் புளோரன்ஸ், மாவட்ட மீனவரணி அமைப்பாளரும் மீன்வா் நல வாாிய உறுப்பினருமான அந்தோணி ஸ்டாலின், உறுப்பினா் லெனின், துணை மேயா் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மண்டலத்தலைவா் நிா்மல்ராஜ், பகுதி செயலாளர் ஜெயக்குமாா், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் ஜேசையா சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் நிக்கோலாஸ்மணி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண்சுந்தா், கவுன்சிலா்கள் பவாணி, வைதேகி, ஆறுமுகம், வட்டச்செயலாளா்கள் டென்சிங்,லியோ ஜான்சன், ரவிசந்திரன், கருப்பசாமி, முன்னாள் அறங்காவலா் குழு தலைவர் செந்தில்குமாா், பகுதி அணி அமைப்பாளர்கள் சுரேஷ்குமாா், தினேஷ், வினோலின், நிா்வாகிகள் அந்தோணிபிச்சை, ஜனாா்ஜி, மைக்கேல், அமல்ராஜ், தாஸ், ஷேக், மோி. ரமேஷ், சுரேஷ், நிஷா, பல்வேறு சங்கநிா்வாகிகள் போஸ்கோ, சில்வஸ்டா், ஜவஹா், தாசில்தாா் திருமணி ஸ்டாலின், மீன்வளத்துறை துணை உதவி இயக்குநா் உத்தண்டராமன், மற்றும் ஊா்கமிட்டிநிா்வாகிகள் மீனவா் சமுதாயத்தை சேர்ந்த பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# காளையார்கோவிலில் மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சி நடந்தது



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஸ்ரீ சரஸ்வதி விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் திருவிழா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தாளாளர்கள் சேகர் ஸ்டாலின் ரவீந்திரன் லெனின் ஜீவானந்தம் ஆகியோர் தலைமையேற்றனர். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி மற்றும் அறிவியல் இயக்கத்தின் காளையார்கோவில் உறுப்பினர்பாண்டி ஆகியோர் முன்னிலைவகித்தனர். அறிவியல் திருவிழாவில் இயற்கை ஆதாரங்களின் பாதுகாப்பு மரபுசாரா ஆற்றல்களின் பயன்பாடு வேதிவினைகளின் போது ஏற்படும் வெப்ப மாற்றங்கள் இயற்கை நிறங்காட்டிகள் சுற்றுப்புற மாசுபாடுகளை குறைக்கும் வழிமுறைகள் ஆற்றல் மாற்றங்கள் எளிய சோதனைகள் மூலம் பல்வகை வாயுக்களை உருவாக்குதல் தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு இவற்றுடன் தொடர்புடைய 100க்கும் மேற்பட்ட செயல்திட்டங்கள் அனைவரையும் வியக்கும் வண்ணம் மாணவர்களால் சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டது. பெற்றோர்கள் குழந்தைகளின் படைப்புகளை மகிழ்வோடு கண்டுகளித்தனர். பள்ளியின் அனைத்து ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் அறிவியல் ஆசிரியர்கள் இவ்விழாவிற்கு சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். செயல்திட்டங்களைத் தயாரித்த அனைத்து மாணவர்களுக்கும் பள்ளி நிர்வாகத்தின் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டன.

# தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இலவச வீட்டுமனை பட்டா எம்.சி.சண்முகையா எம்.எல்.ஏ.வழங்கினார்



தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் இன்று சுமார் 60 பயனாளிகளுக்கு ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா இலவச வீட்டுமனை பட்டாவை வழங்கினார்.

நிகழ்ச்சியில் துணை வட்டாட்சியர் சுரேஷ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பொன்னுச்சாமி, தொழிலாளரணி துணை அமைப்பாளரும் முன்னாள் கவுன்சிலருமான அந்தோணி தனுஷ் பாலன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி டி.டி.சி. ராஜேந்திரன், எஸ்.ஆர். கணேசன், முருகன், முத்துகிருஷ்ணன், இசக்கிமுத்து, ஜாஹீர் உசைன், நெல்சன், ரவி என்ற பொன்பாண்டி, ஊராட்சி செயலர் ஜெயரத்தினம், எம்.எல்.ஏ. உதவியாளர் பாபு, கழக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அழகப்பா அரசு கலைக்கல்லூரியில் மாணவர்களுக்கு திருக்குறள் போட்டி நடந்தது

திருவள்ளுவனுக்குக் குமரியில் வானளக்கும் சிலை, மேனாள் தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களால் நிறுவப்பட்ட இருபத்தைந்தாம் ஆண்டின் வெள்ளி விழாவினைச் மிகச்சிறப்பாக்கொண்டாடும் வகையில், இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழக அரசுக் கல்லூரிகளில் திருக்குறளை இளைய தலைமுறையினரும் அறிந்து, உணர்ந்து போற்றும்

வகையில் போட்டிகளையும் கருத்தரங்கத்தினையும் நிகழ்த்த நிதிநல்கை வழங்கப்பட்டது.

தமிழகஅரசால்வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு கல்லூரி மாணவர்களுக்குவிவாத அரங்கம், படைப்பாக்கம், வினாடி வினா ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. கருத்தரங்கிற்காக வழங்கப்பட்ட நிதியினைக்கொண்டு "*வான்புகழ் வள்ளுவம்"* என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் தொடக்கவிழா 10-01-2026 சனிக்கிழமை அன்று அழகப்பா அரசு கலைக்கல்லூரி, உமையாள் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இப்பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்கான வரவேற்புரையை நல்கிய கருத்தரங்க முதன்மை ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமாகிய முனைவர் மா. சிதம்பரம் தனது வரவேற்புரையில் திருக்குறளின் பெருமையையும் மாணவர்களிடம் தமிழைக் கொண்டு சேர்ப்பதில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள அரும்பெரும் முயற்சிகளையும் எடுத்துரைத்தார்.



தலைமை உரை வழங்கிய கல்லூரியின் முதல்வர் முனைவர் ப. வசந்தி அவர்கள் திருக்குறளின் அருமையை இன்றைய தலைமுறை உணர்ந்து பின்பற்றுவதின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். திருக்குறள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கிப் பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவையை வெளியிட்ட அழகப்பா பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் மதிப்புறு கர்னல் பேராசிரியர் க.ரவி அவர்கள் தனது சிறப்புரையில் திருக்குறளின் அருமைகளை எடுத்துரைத்துத் தமிழர்கள் மிகப் பழங்காலத்தே அறிவியலிலும் அறிவாற்றலிலும் சிறந்து விளங்கினர் என உரைத்ததுடன் தமிழ் சார்ந்த ஆய்வுகள் பிறதுறை சார்ந்தும் நிகழ்த்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்

கருத்தரங்கின் இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் து.இரவிக்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார். கருத்தரங்கினை இணை ஒருங்கிணைப்பாளர்களாகிய இணைப் பேராசிரியர்கள் முனைவர் ப.சு.செல்வமீனா, முனைவர் சி.பரமேஸ்வரி, உதவிப் பேராசிரியர்கள் முனைவர் அ.பாரதிராணி முனைவர் து. இரவிக்குமார் ஆகியோரும் தமிழ் உயராய்வு மையத்தின் பேராசிரியர்களும் திறம்படச் செய்திருந்தனர். கருத்தரங்கத்தின் முதல் நாள் அமர்வுகள் தொடர்ந்து நடைபெற்றன. இக்கருத்தரங்கில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பேராசிரியர்களுடன் இலங்கை, சிங்கப்பூர், இந்தோனேசியாபோன்ற நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்களும், தமிழறிஞர்களும் கட்டுரை வழங்கிச் சிறப்பித்தனர். இக்கருத்தரங்கில் கல்லூரியின் பேராசிரியர்களும் மாணவர்களும் திரளாகப் பங்கு பெற்றனர்.



தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை தமிழக மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட 14வது வார்டு பகுதியில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஈரோடு மாநகராட்சி 14வது வார்டு மாமன்ற உறுப்பினர் புனிதா சக்திவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தகுதி வாய்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழக அரசின் அறிவிப்பின்படி தலா 3,000 ரூபாய் ரொக்கப் பணம் மற்றும் பொங்கல் திருவிழாவிற்குத் தேவையான பச்சரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திமுக தெற்கு மாவட்ட நெசவாளர் அணி முன்னாள் அமைப்பாளர் சக்திவேல் மற்றும் செயலாளர் மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்து, பொதுமக்களுக்கு நேரடியாகப் பொங்கல் பரிசுகளை வழங்கி பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு வரிசையில் நின்று பொங்கல் தொகுப்பினைப் பெற்றுச் சென்றனர். பண்டிகைக் காலத்தில் தமிழக அரசு வழங்கிய இந்த நிதியுதவி மற்றும் பொருட்கள் தங்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என அப்பகுதி பொதுமக்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இந்நிகழ்வில் உள்ளூர் முக்கியப் பிரமுகர்கள், வார்டு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## விசிக மாவட்ட செயலாளர் விஜயபாலனுக்கு ஊத்துக்குளி ஒன்றிய நிர்வாகிகள் நேரில் வாழ்த்து



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எழுச்சித்தமிழர் முனைவர் தொல்.திருமாவளவன் அவர்களின் ஆணைக்கிணங்க, பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்டச்செயலாளராக வி.விஜயபாலன் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். கட்சிப் பணியில் நீண்ட அனுபவம் கொண்ட இவருக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டதற்கு கட்சித் தொண்டர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்நிலையில், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் அவர்களை, பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்ட அலுவலகத்தில் ஊத்துக்குளி ஒன்றிய விசிக நிர்வாகிகள் நேரில் சந்தித்துச் சிறப்பித்தனர். ஊத்துக்குளி ஒன்றியப் பொறுப்பாளர்கள் ராவணன் (எ) தேவராஜ், மருதாசலம், சுப்பிரமணி, சக்திவேல், கௌதம், சத்தியமூர்த்தி, பாரதி ரங்கசாமி மற்றும் சந்திரசேகர் ஆகியோர் மாவட்டச் செயலாளருக்கு மலர்மாலை மற்றும் சால்வை அணிவித்து, உற்சாகமாகத் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது, கட்சியின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வது குறித்தும், வரவிருக்கும் மக்கள் நலப் பணிகளில் ஊத்துக்குளி ஒன்றியத்தின் பங்களிப்பு குறித்தும் விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது. மாவட்ட செயலாளருக்கு வாழ்த்து தெரிவிக்கத் திரண்ட நிர்வாகிகளால் அலுவலக வளாகத்தில் கட்சித் தொண்டர்களின் உற்சாகம் களைகட்டியிருந்தது.

### சித்தோடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பகுதியில் நடைபெற்ற

## நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை அமைச்சர் முத்துசாமி ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், சித்தோடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நேற்று (10.01.2026) நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை மாண்புமிகு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. சு.முத்துசாமி அவர்கள் ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்மருத்துவ முகாம்களில் 34 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவர்கள் என மொத்தம் 54 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள். இம்முகாம்களில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் கண் பரிசோதனை, பல் சிகிச்சை. ரத்தப்பரிசோதனை, ECG, X-RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்ப்பபைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது. மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு. உயர் சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை செய்யப்பட்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 30 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 41,552 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது. 23,723 நபர்களுக்கும் ECG-ம், 28,211 நபர்களுக்கும் ஆய்வக பரிசோதனையும் 2,786 நபர்களுக்கும் X-RAYம், 2,585 நபர்களுக்கும் Scan-ம், 3,161 நபர்களுக்கும் ECHO-ம். முதலமைச்சரின் காப்பீட்டுத்திட்ட அடையாள அட்டை 825 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாமில், தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி சித்தோடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 5 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 5 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களும், 5 நபர்களுக்கு சஞ்சீவி பெட்டகமும், 3 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, என 18 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா. சித்தோடு பேரூராட்சித் தலைவர் கண்ணகி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி சித்தோடு அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடத்தப்பட்ட

## தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித்தொகை திட்ட தேர்வு நடைபெற்றதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு நடுநிலைப்பள்ளியில் பயிலும் 8- ம் வகுப்பு மாணவ மாணவியர்களுக்கு தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் திட்டத் தேர்வுகள் 27 தேர்வு மையங்களில் தேர்வுகள் நடைபெற்றது.

நேற்றைய தினம், ஈரோடு மாவட்டத்தில் மட்டும் இந்த தேர்வில் 6,662 விண்ணப்பதாரர்களுக்கு தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 6,529 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதினார்கள். இதில் 133 விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத வருகைதரவில்லை. தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்பு உதவி தொகை தேர்விற்கு 98 சதவீதம் மாணவ மாணவியர்கள் இத்தேர்வினை எழுதினார்கள். இந்த தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வீதம் உதவித்தொகையாக அவர்கள் மேல்நிலை (12 -ம் வகுப்பு) வகுப்பு முடிக்கும் வரை வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சித்தோடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் இயங்கும் நியாயவிலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரொக்கம் ரூ.3000 வழங்கப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, 099- மேற்கு சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட பெரிய சேமூர் ஈ.பி.பி. நகர், கிராம நிர்வாக அலுவலகத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான உதவி வாக்காளர் பதிவு அலுவலரின் விசாரணை நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர் சு.முத்துசாமி ரூ.6.14 இலட்சம் மதிப்பீட்டில் 129 பள்ளி மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், சித்தோடு, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பயிலும் 129 மாணவியர்களுக்கு ரூ.6.14 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லாமிதிவண்டிகளை மாண்புமிகு வீட்டுவசதி. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (10.01.2026) வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ மாணவியர்களின் நலனுக்காக அவர்களின் நலன் மேல் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பள்ளி குழந்தைகள் சோர்வின்றி படித்திட காலை உணவு திட்டத்தை செயல்படுத்தி அதன் மூலம் மாணவ, மாணவியர்களின் வருகை அதிகரித்துள்ளதுடன், அவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதும் அதிகரித்துள்ளது. மேலும், அரசு பள்ளியில் படித்து 12 வகுப்பு முடித்து உயர்கல்விக்கு செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைபெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டம் ஆகியவற்றின் மூலம் உயர்கல்விக்கு செல்லும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும் மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்க நான் முதல்வன் திட்டம், என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் கிராமப்புற மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வருகிறார்கள்.

நேற்றைய தினம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள், சித்தோடு, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி 11-ம் வகுப்பு பயிலும் 129 மாணவியர்களுக்கு (துலா ரூ.4,900 வீதம்) ரூ.6,14,040/-மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், மாவட்ட முதன்மைகல்வி அலுவலர் இ.மான்விழி, சித்தோடு பேரூராட்சி தலைவர் கண்ணகி, பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், பள்ளி முன்னாள் மாணவர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டு வசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி (09.01.2026) அன்று ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியஉறுப்பினர்களுக்குநலத்திட்டஉதவிகளைவழங்கினார். உடன்மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி,,தூய்மை பணியாளர் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், தூய்மை பணியாளர் நலவாரிய துணை தலைவர் கனிமொழி பத்மநாபன் உட்பட பலர் உள்ளனர்.

## கோவை கணியூர் பகுதியில் உள்ள பார்க் கல்லூரியில் பொங்கல் விழா



கோவை கணியூர் பகுதியில் உள்ள பார்க் கல்லூரியில் தமிழர்களின் பாரம்பரிய பொங்கல் திருவிழா மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. கல்லூரி வளாகத்தில் மண் பானையில் பொங்கல் பொங்க, "பொங்கலோ பொங்கல்" என முழக்கமிட்டு மாணவர்கள் சூரிய வழிபாடு செய்தனர்.

கிராமத்து திருவிழாவை நினைவூட்டும் வகையில் உரியடித்தல், கயிறு இழுத்தல், கும்மி ஆட்டம், ஒயிலாட்டம் உள்ளிட்ட பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பொங்கல் விழாவிற்கு தனித்துவம் சேர்த்தது. இந்த நிகழ்ச்சியில் பாஜக விளையாட்டுப் பிரிவு மாநில செயலாளரும், கல்லூரியின் தலைமை செயல் அதிகாரியுமான அனுஷா ரவி கலந்துகொண்டு மாணவர்களை ஊக்குவித்தார். குறிப்பாக, கொங்குமண்ணின் பாரம்பரிய துடும்பு இசை முழங்க, அதற்கேற்றவாறு மாணவ-மாணவியர் அனைவரும் உற்சாகமாக நடனமாடிய பொங்கல் விழாவை கொண்டாடி மகிழ்ந்தனர். தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பெருமைப்படுத்தும் விதமாக இந்த கொண்டாட்டம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.